# நீலகிரி மாவட்டக் கருவூல அலுவரின் செயல்முறை ஆணைகள்

## முன்னிலை : திரு.மா.சங்கரநாராயணன், பி.எஸ்.சி.,

நாள்.04.10.2021

ந.க.எண்.2806/அ1/2021

பொருள் : பணியாளர் - தமிழ்நாடு மாநில அரசுப் பணி / தமிழ்நாடு சார்நிலைப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வழி பணி அமர்வு - செல்வி.சி.ரம்யா, இளநிலை உதவியாளர், சார்நிலைக் கருவூலம், உதகை - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் - ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்கப் பட்டவை :

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2505/PSD-1/2020 நாள்.30.05.2021.
2. ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.18541/2020/C3 நாள்.31.07.2020.
3. தனியரின் பணியேற்பு கடிதம் நாள்.10.08.2020 மு.ப.
4. கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், உதகை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3713/அ1/2020 நாள்.10.08.2020.
5. கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், உதகை அவர்களின் கடிதம் கா.மு.எண். 510/அ1/2021 நாள்.26.05.2021.
6. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.000794/அ4/2021.

----O----

**ஆணை:-**

பார்வை (1) மற்றும் (2) இல் காணும் ஆணைகளுக்கிணங்க 2018-2019 / 2019-2020 ஆம் ஆண்டிற்க்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வு தொகுதி IV இன் மூலம் இளநிலை உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டு, பார்வை (4) இல் காணும் ஆணையின் மூலம், நீலகிரி மாவட்டக் கருவூல அலகு, மாவட்டக் கருவூலம், உதகையில் பணியமர்வு செய்யப்பட்ட செல்வி.சி.ரம்யா அவர்களின் பணியமர்வு தொடர்பான சான்றுகள் மற்றும் உடல் தகுதிச் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டும் கல்வித் தகுதி குறித்த சான்றுகளின் உண்மைத் தன்மை உறுதி செய்யப்பட்டதன் அடிப்படையிலும் இளநிலை உதவியாளர் தமிழ்நாடு மாநில மற்றும்

த.பி.பா...

6.9.2022

உதவிக் கருவூல அலுவலர்
சார் நிலைக் கருவூலம்
கூடலூர் – 643 212.

சார்நிலைப் பணி விதி 23(a) இன்கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 10.08.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2. பத்தி (1) இல் ஆணையிடப்பட்ட பணிவரன்முறையினைத் தொடர்ந்து செல்வி.சி.ரம்யா அவர்களுக்கு 10.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதி காண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

3. மேலும், "**இப்பணிவரன்முறையானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் தொகுதி -IV 2018-2019 / 2019-2020 தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் சென்னைக் கிளை மற்றும் மதுரைக் கிளைகளில் தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் இதர குற்றவியல் வழக்குகளின் மேல் பிறப்பிக்கப்படும் இறுதி ஆணைகளுக்கு உட்பட்டது**" என்ற பொருண்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

4. தகுதிகாண் பருவக் காலத்தில், தனியர் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

5. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிவிதி 27(b) இன் கீழ் செல்வி.சி.ரம்யா அவர்கள் 10.08.2020 முற்பகல் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக்காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்கப்படுதல் வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

24/10/24

கருவூல அலுவலர்
நீலகிரி மாவட்டம்.

**பெறுநர்.**

1. செல்வி.சி.ரம்யா, இளநிலை உதவியாளர், சார்நிலை கருவூலம், உதகமண்டலம். (உதவி கருவூல அலுவலர், சார்நிலைக் கருவூலம், உதகை வாயிலாக)

**நகல்** : உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம், உதகமண்டலம்..

~~962/2021/T1 25/10/2021~~